**மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**ஆண்டிறுதி மதிப்பீடு – 2019**
**தமிழ் இலக்கிய நயம்**
**தரம் - 11**
**விடைகள்**

பகுதி I

1.

I அ. டார்வின்

ஆ. வலிமை என்பது உடல் வலிமை அல்ல. உடல் எவ்வளவுக்கு இசைவாக்கம் அடைகிறதோ அது நீண்ட நாள் வாழும்.

II. அ. இலக்குமணன்
ஆ. சுமித்திரை , கோசலை

III. அ. பகலைத் தரும் சூரியகுல சோழ மன்னன்
ஆ. நடுவுநிலைமை வழுவாத நன்மையான அருள்.

IV. அ. இயேசு கிறிஸ்து
ஆ. மமதை, கர்வம் , ஆணவம் ,

V. அ. ஒடுக்கப்பட்டோர் / தொழிலாளர்
ஆ. ஒடுக்குவோர் / முதலாளிகள் / அதிகார வர்க்கத்தினர்.

(4x5 = 20 புள்ளிகள்)

2.

I. தான் திறமையாகவும் , வேகமாகவும் குதிரையில் செல்வது போன்ற எண்ணம், அவனது. உள்ளத்தில் தோன்றுகின்றது. தன்னையே உள்ளத்தில் புகழ்கின்றான் போற்றுகின்றான்.

II. திருமணச் சடங்கின் மூலம் மீண்டும் ஓடும் குதிரை வண்டியில் மனைவியுடன் பயணம் செய்கின்றான். இச்சடங்கின் மூலம் தனது இளமைப் பருவத்தினை இனங்காட்டிக் கொள்கின்றான்.

III. குடும்பத்தைக் குதிரையாகவும் தான் அதைச் செலுத்தும் ஓட்டியாகவும் மாறுகிறான் பெண்ணைத் துன்புறுத்தி அவள் சுதந்திரத்தைப் பறிக்கின்றான். பெண், வண்டியை இழுக்கும் குதிரையாகவே கணிக்கப்படுகிறாள். பெண்ணைத் தன் தேவைக்கு மட்டும் பயன்படுத்திப் பின் அடிமையாக்குகிறான். பெண்ணின் கணவனாக இருந்து வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகிறான்.

IV. குடும்பப் பெண்கள் குதிரையாகவும் கணவன் அதை ஒட்டி சவாரி செய்பவனாகவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

V. மரக்குதிரையில் சவாரி செய்து அதனை அடித்துத் தன் திறமையை மெச்சிக் கொண்டவன் தான் வளர்ந்து பெரியவனாகி எஜமானாக, சவாரி செய்பவனாக, கணவனாகப், பெண்ணைத் தண்டிக்கின்றான். தான் அடிக்கும் குதிரையாகப் பெண்ணைத் துன்புறுத்துகிறான்.

(5x5 = 25 புள்ளிகள்)

## பகுதி II

3.

I. இரவில் மரக்கிளையில் தங்கி விடும் கோழிகளை எவ்விதச் சத்தமுமில்லாமல் அமுக்குவதில்.

II. லோரன்ஸ் தனது வேட்டை அனுபவங்களை அதிக நேரம் சொல்வதால் அவன் தவிர்க்கின்றான்.

III. தன்னுடைய பற்கள் உதிர்ந்து பொக்கை விழுந்த பின்னராவது அவர் வேட்டையாடி மரையைக் கொண்டு வந்து விடுவார்.

IV. லோரன்ஸ் பெரிய ஜீவராசிகளோடெல்லாம் போராட்டம் நடத்துவதால்.

V. லோரன்ஸ்வின் வேட்டை முயற்சிகள் அதிக காலத்தின் பின்பே நிறைவேறும் என்பதையும், அவர் தனது அனுபவத்தை நீண்ட நேரம் சொல்லிக் கொண்டிருப்பார் என்பதையும் உணர்த்துகின்றார்.

(5x5 = 25 புள்ளிகள்)

## <u>பகுதி - III</u>

4.

I. என் மடியில் தவழ்ந்தவள். இச்சிறிய வயதில் எத்தனை கொடுமைகளை அனுபவித்துள்ளாள், அவளைத் தெய்வமாக நினைத்து நான் தொழுதால் அவள் அனுபவித்த கொடுமைகளை மூடி மறைத்தவள் ஆகின்றேன், அவள் என் மகள், தெய்வக் கோலத்தால் கண்ணகியை என் கண்களிலிருந்து பறிக்கும், மமதை வழிந்தோடக் கோவலர்கள் சிரிப்பது, முடியுடை வேந்தர்கள் வெண்சாமரம் வீசுதல், சிலம்பை அவள் காலில் அணிந்தவள் நான்.

II. மாதவியை உயர்வாக எண்ணியமை

- மாதவியிடம் பொறாமை கொள்ளாமை, அவளது திறமைகள் என்னிடம் இல்லை என்பதை அறிதல்.

  மாதவியை முழுமையாக அறிதல்.

மாதவி சொற்களைக் கொண்டு சரம் தொடுக்கத் தெரிந்த வித்தகி. மாதவி கவி புனைய கற்றவள், ஆழ்ந்த தர்க்க நூல் தேர்ந்த சாத்திரம் பயின்றவள், மாதவி கேட்ட கேள்வி அவள் கணிகையர் குலத்தில் பிறந்தாலும் மாதவம் செய்த கவுந்தி அடிகளைப் போல் மெத்தப் படித்தவள்.

5.

I. மகள் சரீனா சவுதியில் இருந்து பணம் அனுப்பாமை, காயிதமில்லை, பிள்ளைகள் மூன்று, சமது கடையில் சாமான் தருவதில்லை நேற்று இரவில் இருந்து எல்லாரும் பட்டினி, கண் தெரியாத கிழவி, பேரனுக்கு மருந்து வாங்கப் பணம் இல்லை.

II. சம்பளத்திற்காக உச்சி வெயிலில் உடலை வெப்பமேற்றி நனைத்தல் ,மேடு பள்ளம் பாராது சைக்கிள் மிதித்தல், கால் விரல்களில் வலி வியர்வை நெடி, தலைச்சுற்று, சாப்பிடாமை, பணமின்மை, மகிழ்ச்சியுடன் கதைக்க முடியாமை, சிரிக்க முடியாமை உள்ளம் இறுகிய நிலை வீட்டில் ஏற்படும் முகமுறிவுகள், கல்யாண வீட்டுக்குப் போவதை நிராகரித்தல், பொருளாதாரத்தாக்கம், குடும்பச் சுமை நூறு ரூபாவை எடுக்கும் நிலைமை.

6.

I. தலைவிக்கு முகத்தில் மறு இல்லை. சந்திரனுக்கு மறு இருப்பதாகக் கூறுகின்றான். சந்திரனைப் போல படிப்படியாக நிறைந்து தோன்றி ஒளிவீசும் களங்கமற்றவள். எப்போதும் நிறைவாக ஒளி வீசுவாள்

II. என் தலைவியின் முகத்தைப் போல ஒளி வீச உன்னால் முடியுமாயின் மதியே! நீயும் என் காதலுக்கு உரிமை பெறுவாய். இங்கே ஒளி வீசும் தன்மையில் தலைவியை விடச் சந்திரன் கூடி நிரப்பி ஒளி விடும் தன்மையில் குற்றம் காணப்படுகிறது. ஒளி வீசுவதனால் என் காதலுக்கு உரிமை பெற்றாள். மதியின் ஒளியை விட அவளது முகத்தின் ஒளி மேலானது.

7.

I. படத்தில் பாத்திரத்தின் பார்வைக் கோணத்தில், கமரா ஒவ்வொரு அறையாகத் தேடிப் பார்க்கும், பாடல் காட்சிகள் படமாக்கப்பட்ட விதம், பிரத்தியேகமான உடைகள், கதை நிகழும் இடத்தைக் காண்பித்தல், பார்ப்பவனுள் கதையின் நிகழ்வு முழுமையாக இருக்க அவனுள் நிலவியல் ரீதியான புரிதல்கள் அவசியம்,
தமிழ் அடையாளம் சார்ந்த அழகியலைக் கண்டமை, இறுதிக் கட்டத்தில் கதாபாத்திரங்களைப் பேச விடாமை.

(2x15 = 30 புள்ளிகள்)